Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | மாசி – 1972 | விலை 30 | இதழ் 2 |
|---|---|---|---|---|

# "சமாதானத்தை விரும்பினால் நீதியைத் தேடு"

"நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று சந்தித்து முத்தமிட்டன" என்று வேதாகம தீர்க்கதரிசனம் கூறுகின்றது.

தானங்களில் சிறந்தது எது? என ஒரு வினாவை எழுப்பினால் இன்றைய உலகப் போக்கிலோ - வீட்டிலாயினும், நாட்டிலாயினும், விண்ணுலகத்திலாயினும் எல்லோரும் ஏகமனதாகச் சமாதானமே சிறந்தது என்று உரைக்கத் தவறமாட்டார்கள். அவ்வளவுக்கு எங்கும் சமாதானத்தின் மகத்துவம் உணரப்படுகின்றது. குடும்பங்களில் சிக்கல்கள்; நாடுகளில் பிளவுகள்; இப்படி எத்தனையோ அமைதியீனங்கள் நிலவுகின்றன. சமாதானம் என்பது நீதியின் செயலாகும். நாம் சமாதானத்தை விரும்பினால் கிறிஸ்துநாதரையே விரும்புகின்றோம். அவரே எமது சமாதானம். அவரின் நற்செய்தி சமாதானத்தின் நற்செய்தி. கல்வாரிப் பலியினாலே உலகம் முழுவதையும் ஒன்றாக்கினார் இயேசு. ஆகவே அவரது அடிச்சுவட்டைப் பின்பற்ற; உண்மையான நிரந்தர சமாதானத்தை உருவாக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

> 1972 இன் உலக சமாதான விழாவுக்குரிய கட்டுரைப் போட்டியில் முதல் இடம் பெற்ற கட்டுரை.

இன்றைக்கு ஒருகோடி மக்கள் வறுமையால் வாடி வாழ நேரிடுமாயின் அவர்கள் அந்நிலைமையை மாற்றப் புரட்சிப் போர்களில் ஈடுபடுதல் வியப்புக்குரியதன்று. உலகில் மக்கள் தொகை பெருகுகின்றது. பிறக்கின்ற அத்தனை குழந்தைகளையும் பேணி வளர்க்கவேண்டும். அணுக்குண்டை வைத்துக்கொண்டு அன்பு பேசினால் அமைதி ஏற்படுமா? ஆயுதங்களைப் போட்டுவிட்டு அன்பு வழியை நாடவேண்டும். நாடுகளுக்கிடையே நல்லுறவு பெருகவேண்டும். மக்களை மக்களாக மதித்தொழுகும் நல்லெண்ணம் நிலைக்க வேண்டும். நீதிவழி நின்று சட்டத்தைப் பேணி நடக்க வேண்டும். பேச்சு வார்த்தைகளைத் திறந்த மனதுடன் பரிமாறிக்கொள்ள வேண்டும். அநுதாபத்துடன் பிரச்சினைகளை அணுகவேண்டும். அடிப்படை நல்லெண்ணத்துடன் தீர்வுகாண வேண்டும். கொண்டும் கொடுத்தும் வாழமுற்படவேண்டும். அதிகாரத்துடன் அல்ல, அன்புடன் ஆட்சிபுரியவேண்டும். தாம் மட்டும் வாழ்ந்தால் போதுமென்ற தன்னலம்

[16ம் பக்கம் பார்க்கவும்]

**செல்வன். E. கிறிஸ்ரியன் கிளெனி**

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (துணை ஆயர்)

### (30) உறுதிப் பூசுதலின் இயல்பும் மாண்பும்.

இலத்தின் திருச்சபையில் பழைய காலத்திலிருந்தே ஞானஸ்நானத்திற்கும் திருவிருந்தருந்தலுக்கும் இடையில் இடம் பெற்ற கைகளை விரித்தல், எண்ணெய்யாற் பூசுதல் போன்ற சில சிறப்பான சடங்குகள் மூலம் பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டு வந்துள்ளார். காலகதியில் இச்சடங்குகளுள் திருவருட் சாதனத்தின் பெறுமதிக்கு அவசியமானது எது என்ற பிரச்சினை எழுந்தது. இப்பிரச்சினையைப் பரிசுத்த தந்தை 6வது சின்னப்பர் தீர்த்து வைத்துள்ளார். 1971ம் ஆண்டு ஆவணி 15ல் அவர் உறுதிப்பூசுதல் பற்றி வெளியிட்ட கொள்கைப் பத்திரத்தில், **கையை விரித்து பரிசுத்த பரிமள தைலத்தால் நெற்றியில் பூசுதலே திருவருட் சாதனத்தின் பெறுமதிக்கு அவசியமான திருச்சடங்கு என்று** உறுதிப்படுத்திக் கூறியுள்ளார். ஏனெனில், இந்தப் பூசுதல் அப்போஸ்தலர் செய்துவந்த கைகளை விரிக்கும் சடங்கை ஒரு விதத்தில் குறிக்கின்றது. அன்றியும், விசுவாசிகள் திருவருட் சாதனத்தினால் பெறும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் நன்கு குறிக்கின்றது.

உறுதிப் பூசுதற் திருவருட்சாதனத்திற்குரிய திருவார்த்தைகளிலும் பரிசுத்த தந்தை ஒரு பெரு மாற்றம் செய்துள்ளார். இதுவரை பயன் படுத்தப்பட்டு வந்த ''பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே நான் உன்னைச் சிலுவை அடையாளத்தால் முத்திரித்து இரட்சணிய பரிமள தைலத்தால் உறுதிப்படுத்துகிறேன்'' என்ற திரு வார்த்தைகளுக்குப் பதிலாக, கீழ்நாட்டுத் திருச்சபையில் பழைய காலத்திலிருந்தே வழக்கிலிருந்துவரும் **''பரிசுத்த ஆவி என்னும் கொடையின் அடையாளத்தைப் பெற்றுக்கொள்''** என்னும் திருச்சொற்களை இனிமேல் உரோமன் திருச்சபையும் பயன்படுத்த வேண்டுமென்று பணித்துள்ளார். (பரிமள தைலத்தால் நெற்றியில் பூசுதலுக்கு முன் இடம் பெறும் கைகளை விரித்து நீட்டும் திருச்சடங்கும் அவ்வேளை சொல்லப்படும் செபமும் திருவருட்சாதனத்தின் பெறுமதிக்குத் தேவையற்றவையெனினும், அதன் நிறைவுக்கும், அதை நன்கு விளங்கிக்கொள்வதற்கும் அவை பெரிதும் உதவுகின்றன. ஆகவே, அவற்றிற்குத் தகுந்த மதிப்பு அளிக்கப்படவேண்டும் என்றும் பரிசுத்த தந்தை கூறியுள்ளார்).

முழுத் திருச்சடங்கும் இருவித கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றது: உறுதிப்பூசுதல் பெறுவோர்மீது கைகளை விரிக்கும் திருச்சடங்கு பரிசுத்த ஆவியின் வருகையை வேண்டும் விவிலிய கிரியையை கிறிஸ்தவ மக்கள் இலகுவாய் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் நினைப்பூட்டுகின்றது; பரிமள தைலத்தால் பூசுதலும் அப்போது சொல்லப்படும் திருவார்த்தைகளும் உன்னத கொடையாகிய பரிசுத்த ஆவி அளிக்கப்படுவதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. பரிமள தைலத்தால் பூசப்படும் கிறிஸ்தவன் உன்னத கொடையாகிய பரிசுத்த ஆவியோடு கிறிஸ்துவின் அழியாத ஒரு முத்திரையையும் பெறுகின்றான். இதனால் அவன் கிறிஸ்துவுக்கு நிறைவான முறையில் ஒத்தவனாகி, 'அவரது நறுமணத்தை' மக்கள் மத்தியில் பரப்பும் அருளையும் பெறுகின்றான். உறுதிப்பூசுதல் ஒரு அழியாத ஞான முத்திரையைப் பதிப்பதால் அதை ஒரு முறைக்குமேல் பெறமுடியாது. உறுதிப்பூசுதலுக்குரிய பரிசுத்த பரிமள தைலம் பெரிய வியாழக்கிழமை ஆயரால் ஆடம்பரமாய் மந்திரிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத் திருவருட் சாதனங்களுள் உறுதிப்பூசுதலும் ஒன்றாகும். ஆகையால், கிறிஸ்தவ வாழ்வில் அது வகிக்கும் முக்கிய இடத்தையும், அதன் மாண்பையும் நாம் நன்றாக அறிந்து கொள்ளல் அவசியம்.

''உயிருள்ள கிறிஸ்துவின் உறுப்பினர் என்ற முறையில் விசுவாசிகள் எல்லாரும் ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், தேவநற்கருணை வழியாய் கிறிஸ்துவோடு ஒருடலாகி

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்போஸ்தலரான புனித தோமையார்

## (2) புனித தோமையாரும் வட இந்தியாவும்.

இயேசுநாதர் விண்ணுலகு ஏகுமுன் தம் அப்போஸ்தலர்களைப் பார்த்து, "நீங்கள் உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" (மாற்கு 16, 15) என்று கட்டளையிட்டிருந்த போதிலும், அவர்கள் சில காலத்திற்கு பலஸ்தீன் நாட்டின் எல்லைக்கு வெளியே நற்செய்தியைப் போதிக்கச் செல்லவில்லை. புனித இராயப்பரே முதல்முதலாகப் பலஸ்தீன் நாட்டை விட்டு வெளியேறினார். சீரியாவிலிருந்த அந்தியோக்கு நகருக்குச் சென்று அங்கிருந்த கிறிஸ்தவ சபைக்குத் தலைமை வகித்தபின், உரோமாபுரிக்குச் சென்று அங்கு திருச்சபையை நிறுவினார். அவரது சகோதரராகிய புனித பெலவேந்திரர் ஆக்காயாவுக்குச் சென்று நற்செய்தியைப் போதித்தார். புனித அருளப்பர் சின்ன ஆசியாவில் (இன்றைய துருக்கி நாட்டில்) பலகாலம் தங்கியிருந்து ஏழு கிறிஸ்தவ சபைகளைக் கண்காணித்து வந்தார் (திருவெளிப்பாடு 1, 4). அவரது சகோதரராகிய புனித பெரிய இயாகப்பர் இஸ்பானியா நாட்டில் நற்செய்தி அறிவித்ததாகக் கூறப்படுகின்றது. புனித தோமையார் எங்கு சென்றார்?

புனித லூக்காஸ் எழுதிய ,'**அப்போஸ்தலர் பணி**'' என்ற திருச்சபையின் ஆரம்ப வரலாற்று நூல் புனித சின்னப்பர் வெளிநாடுகளில் செய்த நற்செய்திப் போதகப் பணியை சிறப்பாக விபரிக்கின்றது. ஏனைய அப்போஸ்தலர்கள் பலஸ்தீன் நாட்டிற்கு வெளியே செய்த போதகப் பணிபற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. ஆனால், ஆதிக் கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் நற்செய்தி பரப்பும் பணிபற்றிய தகவல்களைத் திரட்டிப் பரம்பரையாகப் பாதுகாத்து வந்தனர். இதன் விளைவாக கி. பி. 2ம் நூற்றாண்டில் "**அப்போஸ்தலர்களின் போதனை**" என்ற நூல் சீரியாக்கு மொழியில் தோன்றிற்று. அந்நூலில் புனித தோமையாரைப்பற்றி பின்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன. "**இந்தியாவும்** அதைச் சேர்ந்த நாடுகளும், தூரக் கடல்வரை சுற்றியுள்ள நாடுகளும் **யூதா தோமையாரிடமிருந்து** அப்போஸ்தலிக்க குருத்துவத்தைப் பெற்றுக்கொண்டன. அவர் அங்கு திருச்சபையைக் கட்டியெழுப்பி, அதற்குப் பணிவிடை செய்து, அதன் வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்தார். அப்போஸ்தலர்களுக்குப்பின் திருச்சபையிலிருந்த தலைவர்கள் அப்போஸ்தலர்களிடமிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட அனைத்தையும் தம் சீடர்களிடம் ஒப்படைத்தனர். ஜெருசலேமிலிருந்து யாகப்பர் எழுதியதையும், உரோமையிலிருந்து சீமோன் எழுதியதையும், எபேசுவிலிருந்து அருளப்பர் எழுதியதையும், பெரிய அலெக்சாந்திரியாவிலிருந்து மாற்கு எழுதியதையும், பிரிஜியாவிலிருந்து பெலவேந்திரர் எழுதியதையும், மக்கதோனியாவிலிருந்து லூக்கா எழுதியதையும், **இந்தியாவிலிருந்து யூதா தோமையார் எழுதியதையும்**, இன்னும் அப்போஸ்தலர் எவரேனும் எழுதிய கடிதங்களையும் பெற்றுக்கொண்டு, எல்லா இடங்களிலும் கோவில்களிலும், லூக்கா எழுதிய "அப்போஸ்தலர் பணி" வரலாற்றைப்போல், வாசிக்கப்பட வேண்டுமென்றும் பணித்தார்கள்,,.

அப்போஸ்தலரான புனித தோமையாரின் நற்செய்திப் பணி, மரணம் ஆகியவை பற்றி தகவல் தரும் இன்னொரு பழங்கால நூல் "**அப்போஸ்தலரான புனித தோமையாரின் பணி**" என்ற ஏடாகும். இது சீரியாக்கு மொழியில் கி. பி. 250ம் ஆண்டளவில் எழுதப்பட்டதென்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். புனித தோமையார் இந்தியாவிலிருந்து எழுதிய கடிதங்களை அடிப்படையாக வைத்தே இந்நூல் எழுதப்பட்டிருக்கவேண்டும். அது பல மொழிகளில் பெயர்க்கப்பட்டு கிறிஸ்தவ மக்களால் ஆவலுடன் படிக்கப்பட்டுவந்தது. எனினும் அது நிகழ்ச்சிகளை மிகைப்படுத்தியும், கற்பனைக் கதைகளைச் சேர்த்தும் எழுதப்பட்டிருந்தமை

(4ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அப்போஸ்தலரான...

*(3ம் பக்கத் தொடர்ச்சி)*

யால், ஒரு உண்மை வரலாற்று நூலாக அங்கீகரிக்கப்படவில்லை அதில்இடம்பெற்றுள்ள கற்பனைக் கதைகளை ஒதுக்கிவிட்டால், பின் வரும் நம்பத்தகும் தகவல்களைக் காணலாம்:

1. அப்போஸ்தலர்கள் சிறிதுகாலம் ஜெருசலேமில் தங்கியிருந்தபோது, ஒவ்வொருவரும் தாங்கள் நற்செய்தி போதிக்க வேண்டிய நாடுகளைச் சீட்டுப்போட்டுப் பகிர்ந்துகொண்டனர்; **யூதா தோமையாருக்கு இந்தியா கிடைத்தது.**

2. இந்தியாவுக்குச் செல்ல தோமையார் முதலில் மறுத்தாராம்: "நான் ஒரு எபிரேயன்; எப்படி இந்தியர்களுக்குப் போதிக்கமுடியும்?" ஆனால், இயேசு இரவில் அவருக்குத் தோன்றி, "தோமாஸ், நீ அஞ்சாமல் இந்தியாவுக்குச் சென்று நற்செய்தியைப் போதி. என் அருள் உன்னோடிருக்கும்" என்று தேற்றினராம்.

3. தோமையார் கப்பன் என்ற ஒரு இந்திய வணிகனோடு கப்பலேறி, வட இந்தியாவில் (சிந்துநதிப் பள்ளத்தாக்கில்) இருந்த **கொண்டோபார்** அரசனின் இராச்சியத்திற்கு வந்து, சிறிது காலம் அங்கு தங்கியிருந்து, அரசனையும் அவனுடைய சகோதரனையும் பல குடிகளையும் தமது போதனையால் மனந் திருப்பினர். அவர்கட்கு ஞானப் பணிபுரிய திருத்தொண்டர்களையும் குருக்களையும், **சாந்திப்பஸ்** என்பவரை தக்சிலா என்ற தலைநகரில் ஆயராகவும் ஏற்படுத்தியபின் தென் இந்தியாவுக்குப் பயணமானர்.

4. வழியில் பல இன்னல்களை மேற்கொண்டபின் தென்னிந்தியாவை அடைந்து மஸ்தாய் (மகாதேவா அல்லது வாசுதேவா) என்ற அரசனின் இராணியையும் மகளையும், பல குடிகளையும் திருமறையில் சேர்த்ததன் காரணமாக அரசன் அவரைக் கைது செய்து, பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்க் கொல்லும்படி கட்டளையிட்டான். காவலாளர் அவரை ஒரு மலைக்குக் கொண்டுபோய் ஈட்டிகளால் குத்திக் கொன்றனர். அவருடைய சீடர்கள் அவரது உடலை எடுத்து சற்றுத் தூரத்தில் அடக்கம் செய்தனர். சில காலத்திற்குப்பின் புனித தோமையாரின் திருவுடல் மெசப்பொத்தேமியா நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

புனித தோமையார் இந்தியாவுக்கு வருமுன் பார்த்தியர், மேதியர், பார்சியர், கிர்க்கானியர் ஆகிய இனத்தாருக்கு நற்செய்தியைப் போதித்தார் என்று **உரோமையின் தேவசாட்சிகள் பட்டியலும், கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சபையின் புனிதர்கள் வரலாற்று நூலும்** கூறுகின்றன. ஆகவே, புனித தோமையார் அப்போது மெசபொத்தேமியாவின் தலைநகராயிருந்த எதேசா பட்டணத்தில் சில காலம் தங்கியிருந்து நற்செய்தி அறிவித்திருக்க வேண்டும். பின்பு, பார்சியா, அவ்கனிஸ்தான் முதலிய நாடுகளைத் தரை மார்க்கமாகக் கடந்தே வட இந்தியாவை அடைந்திருக்க வேண்டும்.

புனித தோமையார் சேர நாட்டிற்கும் வந்து பலகாலம் தங்கியிருந்து திருச்சபையை நிறுவியபின்தான் சோழ நாட்டிற்குச் சென்று மைலாப்பூரில் வேதசாட்சியாக மரித்தார் என்று இந்திய திருச்சபையின் பழைய பாரம்பரியம் கூறுகின்றது.

புனித தோமையார் இந்தியாவுக்கு வந்து நற்செய்திப் பணி புரிந்தார் என்பதற்கு டொரோதேயுஸ், புனித கிரகோரி நசியான்சன், புனித அமிர்தநாதர், புனித ஏரோணிமுஸ், புனித கவுதன்சியுஸ், புனித பவுலீனஸ் புனித பொன்வாய் அருளப்பர், புனித எபிரேம் போன்ற திருமறைத் தந்தையரும், பழங்கால வேத சாட்சிகளின் பட்டியல்களைத் தொகுத்தவர்களும் சான்று பகர்கின்றனர்.

[வளரும்]

### எதிர்பாருங்கள்!

**"வேதாகமத்தைப் படிப்போம்"** என்ற தலைப்பில், **அருட்திரு. R. S. லோப்பு அடிகள்** எழுதும் கட்டுரைகள் அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகும்!

ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தொடர்கதை

# தேவ நீதி (4)

"ஜெயம்"

இப்பொழுது வில்லி நன்றாகப் பயந்து விட்டாள். வெளியே பெய்த மழை, மின்னல் இடி யெல்லாம் அவள் மனதில் நர்த்தனம் செய்தன. விபரீதம் ஏற்படப் போகிறதே என்று தவித்தாள், அங்கு மிங்கும் ஓடினாள். முடிவாக.... மாமா.... மாமா.... அவர் அறையைத் தட தட வென்று தட்டினாள். அதைத் தவிர வேறு வழியில்லை அவளுக்கு. பதறியடித்துக் கொண்டு கதவைத் திறந்த பாக்கியநாதருக்கு, வில்லியின் கோலம் வியப்பளித்தது. ''என்னம்மா.... என்ன நடந்தது?'' என்றார் அவசரமாக. ''மாமா நான் என்ன சொல்லுவேன், பெரிய விபரீதமே நடக்கப் போகிறது மாமா'' என்று அலறினாள். ''ஆ.... என்ன விஷயம்.... சொல்லம்மா சீக்கிரம்'' என்று பதறினார் பாக்கியநாதர். தாசனைத் திருத்த அருளும், அவளும் நடத்திய நாடகத்தையும், இதனால் அருளைப்பற்றி அவள் இழிவாகச் சொல்ல, தாசன் இதை நம்பிக்கொண்டு கோபா வேசமாக வெளிக் கிளம்பியதையும் விளக்கினாள். ''இம்.... ஆத்திரத்தில் அந்த நல்ல பிள்ளையை என்ன செய்வானோ தெரியவில்லை. என்ன சிறு பிள்ளைத் தனமான செயல்'' என்று அலுத்துக் கொண்டு, ''மாணிக்கம். மாணிக்கம்'' என்று கூப்பிட்டார். மாணிக்கம் என்ற வேலையாள் கண்ணைக் கசக்கிக் கொண்டு ஓடி வந்து ''ஐயா'' என்றான். ''மாணிக்கம் சின்னக் காரைக் கொண்டுவரச் சொல்லு ட்ரைவரிடம்'' என்று சொல்லிவிட்டு சட்டையை மாட்டிக்கொண்டு, கைத்தடியுடன் போவதற்குப் புறப்பட்டார். குற்றம் செய்த குழந்தை தந்தையை நோக்குவது போல அழுது கொண்டு அவரைப் பார்த்தாள் வில்லி. கார் வந்ததும் ''வாம்மா'' என்று அழைத்துக் கொண்டு காரில் ஏற அவளும் ஏறிக்கொண்டாள். அம்பெனச் சென்ற அந்த சின்னக்கார், ஐந்து நிமிடத்தில் அருள் வீட்டில் நின்றது. அவசரமாக உள்ளே சென்று கதவைத் தட தட வென்று தட்டினார். அப்பொழுதுதான் சட்டென்று அவருக்கு நினைவுக்கு வந்தது. ''தாசன் காரில் அல்லவா வந்தான்? அப்படியானால் கார் இங்கேதானே நிற்க வேணும். காணவில்லையே? அருளும் உறக்கத்திலல்லவா இருக்கிறான் போலிருக்கு, தாசன் வந்திருந்தால் பேச்சுக்குரல் கேட்குமே? ஒருவேளை வந்து போய் விட்டானோ? சே.... ச்....சே அவன் புறப்பட்டு சிறிது நேரத்தில் வந்துவிட்டோமே? வழியிலும் சந்திக்கவில்லையே?'' இவ்வாறு நினைத்துக் குழம்பிக் கொண்டார் பாக்கியநாதர். இதற்குள் கதவு திறபட ''ஐயா வா....? இந்த நேரத்தில்....!! ஆச்சரியத்துடன் கேட்டான் அருள். அவர் ''பேச நேரமில்லை.... தாசன் வந்தானா?'' என்று கேட்டுக்கொண்டு அங்குமிங்கும் பார்த்தார். வில்லி தவித்துக் கொண்டிருந்தாள். "இல்லையே. ஏன்?.... என்று இழுத்துக்கொண்டு வில்லியை பொருள் புதையப் பார்த்தான். அவள் கோ வென்று கதறிக் கொண்டு ''அண்ணா விபரீதம் நடந்து விட்டது அண்ணா'' என்றாள். இப்பொழுது அருளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. 'தாசன் எங்கே' என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். பாக்கியநாதர் அவனையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். அருளுக்கு இந்தப் பார்வை தன்னைக் குற்றம் சாட்டுவது போலிருந்தது. ''ஐயா.... தங்களிடம் தெரிவிக்காமல் இப்படியொரு காரியத்தை செய்தது தவறுதான். ஆனால், அவன் என்னிடம் தான் ஆத்திரத்துடன் வருவான். அப்படி வருபவனுக்கு ஏற்ற கருத்துக்களைச் சொல்லி திருத்தி விடலாம் என்ற எண்ணத்தில்தான் அப்படிச் செய்தேன் .... பிழையானால் மன்னியுங்கள் ஐயா'' என்று வேதனையுடன் கூறினான். அவனது மனதைப் புரிந்து கொண்ட பாக்கியநாதர் ''மன்னிக்கவோ, மன்றாடவோ இது நேரமல்ல; முதலில் கோபமாக வெளியேறிய தாசனைக் கண்டுபிடிக்க வேண்டும். மேலும் ஏதாவது விபரீதம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் ஆகவே நீயும் வா, வீட்டிற்கு போவோம்'' என்றார். அனைவரையும் ஏற்றிக்கொண்டு வீர் எனப் புறப்பட்டது கார். புத்திர பாசம் என்பது புரிந்து கொள்ள முடியாததொன்று. எத்தனைதான் கெட்டழிந்து போனாலும் பெற்றவர்க்கு பிள்ளைமேல் பாசம் குறைவதில்லை. ஊதாரிப் பிள்ளையின் கதை ஞாபகத்துக்கு வந்தது அருளுக்கு. வீட்டைக் கார் நெருங்கியதும் அந்த இரவு நேரத்திலும் பலர் அங்கு கூடி நின்று கசமுச என்று பேசிக்கொண்டிருந்தார்கள். பாக்கியநாதரைக் கண்டதும் கசமுச என்ற குரல்களும் அடங்கிவிட்டன. அனைவரும் வழிவிலகி மௌனமாய் நின்றார்கள்.

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேவநீதி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த நிலையைக் கண்டதும் லில்லி பயந்து ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது என்று நினைக்க அவள் பூவுடல் ஒருமுறை நடுங்கிற்று. ''யேசுவே ...... என் இல்லற ஜோதியை அணைத்து விடாதேயும்'' என்று வேண்டிக்கொண்டு உள்ளே ஓடினாள். பாக்கியநாதர் மனம் திக்.... திக்.... என்று துடித்துக் கொண்டது. அப்போது ''ஐயா ...... ஐயா ....'' என்று கத்திக் கொண்டு மாணிக்கம் ஓடிவந்து, ''ஐயா, சின்ன ஐயா போன கார் மரத்தில் மோதி ஐயாக்கு சரியான அடியாம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறுங்களாம்'' என்று பதறிக்கொண்டு சொல்ல ''ஆ!'' என்று ஏககாலத்தில் மூன்று குரல்கள் அலறின. தணலிலிட்ட கொடி போலத் துவண்டு நினைவற்றுக் கிழே விழுந்தாள் லில்லி. திக் பிரமை பிடித்துப் போய் நின்ற பாக்கியநாதர் திரும்ப அருளைப் பார்த்தார். ''எல்லாம் உன்னால் வந்த வினைவு'' என்று குற்றம் சுமத்துவது போலிருந்தது. அவன் உடல் கூனிக் குறுகிற்று. ட்ரைவர்.... காரை எடு'' என்று சிம்ம கர்ஜனை செய்து கொண்டு முன்னே நடந்தார். அவரைத் தொடர்ந்து பலிக்குப் போகும் ஆடுபோல அருளும் சென்ருன்.

வைத்தியசாலையை அடைந்ததும் ஓட்டமும் நடையுமாக உள்ளே சென்றனர் இருவரும். அங்கே பாக்கியநாதரின் நண்பர் யோசப் நின்று கொண்டு சிலருடன் பேசிக் கொண்டிருந்தார். அவரைக் கண்ட பாக்கியநாதர் அவசரமாக ''யோசப் எங்கே என் மகன். எப்படி இருக்கு'' என்று பதறிக் கொண்டு கேட்டார். யோசப் அமைதியாக, அவரை அழச் செய்து ''பயப்படாதீங்க தக்க சமயத்தில் இங்கு கொண்டு வந்து விட்டேன். இப்பொழுது ஒப்பரேஷன் நடக்கிறது'' என்ருர். தலையைச் சுவரில் சாய்த்துக் கொண்டு கோ வென்றழுதார். அவர் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது. இவருக்குத் தேறுதல் சொல்ல முடியாது என்று எண்ணிய யோசப், அவரை அப்படியே விட்டுவிட்டார். அருளோ அவர் அருகில் வரவும் அஞ்சி நடுங்கி, சுவரோடு சுவராக நின்று அழுதான். நேரம் விரைவாக ஓடிக்கொண்டிருக்க, வைத்தியரும், தாதிமாரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். சுமார் மூன்று மணி நேரத்திற்குப்பின் அநேகமாக விடியும் நேரத்தில் வைத்தியர் வெளியே வந்தார். பாக்கியநாதர் அவரைக் கண்டதும் ஓடிப்போய் ''டாக்டர் .... எப்படி.... டாக்டர் என் மகன் பிழைப்பானு டாக்டர்'' என்று கதறினுர். வைத்தியர் அவரைக் கையமர்த்திவிட்டு, ''மிஸ்டர் பாக்கியநாதர் கவலைப்படாதீங்க. உங்க மகன் பிழைத்திடுவான். ஆனுல் .... என்று நிறுத்திவிட்டு யோசித்தார் வைத்தியர். பதட்டமும், பயமும் கொண்ட பாக்கியநாதர் ''ஆனுல் என்ன டாக்டர்? ...... சொல்லுங்க .... டாக்டர்.'' என்று அவசரப்படுத்தினுர். ''வெகு வேகமாகக் காரை ஓட்டிச் சென்றிருக்கிருர் மிஸ்டர் தாசன். இரவு நேரம் மழை பெய்து கொண்டிருந்ததாலும் பாதை வழுக்கி விட்டது. பிறேக் பிடித்திருக்கிருர் அது ஒரு பக்கம் இழுத்துச் சென்று மரத்துடன் மோதி விட்டது. இதனுல் அவருக்குக் கால்களில் பலமாக அடிபட்டிருக்கிறது. மிகுந்த சிரமப்பட்டு உயிரைக் காப்பாற்றி விட்டோம். ஆனுல் ......'' மீண்டும் நிறுத்திவிட்டார். ''டாக்டர் ...... என்னது? சொல்லுங்க'' என்று பாக்கியநாதர் பொறுமையையிழந்தார். ''அவர் இனிமேல் .... நடந்து திரிய முடியாது மிகக் கஷ்டமான ஒரு ஒப்பரேஷன் செய்துதான் அவர் உயிரைக் காப்பாற்ற முடிந்தது'' என்று நிதானமாகக் கூறி முடித்தார் வைத்தியர். ''ஆ! ......'' என்று பல குரல்கள் ஒருங்கே ஒலித்தன. சில வாரங்களுக்குப்பின் தாசன் வைத்தியசாலையை விட்டு வெளியேறியபோது ஒரு நொண்டியாக மட்டுமல்ல, ஒரு திருந்திய மனிதனுகவும் வெளியேறினுன். (முற்றும்)


இலங்கைக் கத்தோலிக்க தமிழ் இலக்கியக் கழகத்தின்

**மூன்று சிறந்த வெளியீடுகள்**

1. 2ம் வத்திக்கான் சங்கத்தின் எதிரொலி ரூ. 3-25
2. மீட்பரும் குருவும் ரூ. 2-00 (கிறிஸ்தவ மக்களுக்கு உரிய நூல்)
3. வாழ்வளித்த வள்ளல் ரூ. 1-75 (கிறிஸ்தவர்கள் அல்லாதாருக்குக் கிறிஸ்துநாதரை அறிமுகம் செய்ய உதவும் நூல்)

**கிடைக்கும் இடங்கள்:**

1. மறைக்கல்வி நடுநிலையம், ஆயர் இல்லம், மட்டக்களப்பு.
2. அருட்திரு. S. J. இம்மானுவேல் அடிகள், புனித அன்னம்மாள் கோயில், மானிப்பாய்.
3. மறைக்கல்வி நடுநிலையம், பேராயர் இல்லம், பொறளை, கொழும்பு.
4. The Catholic Book Depot, Pettah, Colombo – 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகளிர் மன்றம்

## கல்லும் கனியாகும்

"காமல்"

அமைதியின் இருப்பிடமான அந்தக் குடிசையில் சில மாதங்களாக அமைதி அழிந்து கொண்டே வந்தது. அன்னை உள்ளம் அங்கலாய்த்தது தன் ஒரே பேருன செல்வ மகள் நிலையினுல். துள்ளித்திரியும் பாலப் பருவம் கடந்து வளர்ச்சியுறும் வாலிபப் பருவத்தை எட்டிப்பிடித்த மகளின் யௌவனப் பருவம் கண்டு பூரித்த தாய் உள்ளமா இப்போது தவியாய்தவிக்கின்றது. ஆம் அந்த மங்கையோடு விளையாடும் வியாதிதான்யாதோ?.....

திடீரென்று மிரளுவாள்-பேயொலியுடன் சிரிப்பாள்—சில சமயம் திசை தெரியாது ஓடுவாள்—சில நாட்கள் படுத்தபடுக்கையாயிருப்பாள். சிலவேளை அதிசயிக்கத்தக்க அமைதியுடன் இருப்பாள். தாய்தான் என் செய்வாள். தேடாத வைத்தியரில்லை. செய்யாத மருந்தும் இல்லை. ''செய்கையாய் இருக்கும். இவன் அவன் குணப்படுத்துவான் என்ருர்கள்'' அயலவர்கள். தாயோ எல்லோரையும் அழைத்துவந்தாள். சாமி பூதத்துக்கெல்லாம் படைத்தாள். முடிவு காசுதான் கரைந்தது. மகளுக்கு உடல்நலம் வந்தபாடில்லை. வாடியவதனமுமாய் தேய்ந்த உடலுமாய் மாறி வந்த மகளைப்பார்க்கச் சகிக்காதவளானுள்.

யூதர்கள் நடுவில் யாரோ ஒருவர் தோன்றியிருக்கிறதாக அவள் எங்கேயோ கேள்வியுற்ருள். அவர் மிகவும் நல்லவர். இரக்கமுள்ளவர். பேய்களை ஓட்ட வல்லவர். அரிய செயல்களை ஆற்றக்கூடியவர் என்றெல்லாம் யூத மக்கள் பேசினுர்கள். இவள் யூத இனமல்ல. எனினும் மகள் பாசம் அவரை அண்டிச் செல்லத் தூண்டியது. நான் அவருடைய இனமில்லையே. என்னை அவர் புறக்கணித்தால்? இல்லை. அவ்வாறு விரட்டமாட்டார். மிகவும் நல்லவராமே! ஆனுல் இந்த முரட்டு மகளை கூட்டிக்கொண்டு அவரைத்தேடி எப்படிச் செல்வது? அவர் ஒரு ஊரில் தங்கமாட்டாராமே! எங்கு இருப்பாரோ? அவரையும் எப்படியாவது கடைசியாகப் பார்த்துவிடவேண்டும். அவர் ஒருவர் தான். அவரில்தான் என் நம்பிக்கையெல்லாம். எந்த நோயையும் தீர்த்துவிடுவாராம்! அவர் எங்கே இருக்கிருரோ? துணிந்து தேடிப் புறப்பட்டுவிட்டாள். அந்தக்கனேய பெண். தெருவில் போகிறவர் வருகிறவர்களிடமெல்லாம் ''அவர் எங்கே'' என்ற கேள்விதான். அலைந்து திரிந்து கடைசியாக அவர் இருந்த இடத்தைக் கண்டுகொண்டாள்.

அங்கே எல்லாம் ஆண்கள். அவர்களில் ஒருவர், அருளும் அன்பும் அனுதாபமும் வழிந்தோடும் முகத்தோடிருந்தார். இரக்கம் சுரக்கும் இதயம். இதய மறைவுகளை ஊடுருவும் கண்கள். இவர் யார்? இவர்தான் அவர். அவரைக் கண்டாள். அவர்பால் இழுக்கப்பட்டாள். தன் இனத்தை மறந்தாள் தன் மதத்தை மறந்தாள். தன்னையே மறந்தாள். அவர் பாதத்தில் விழுந்தாள். ''ஆண்டவரே தாவீதின் குமாரனே! என்பேரில் இரக்கமாயிரும். என் குமாரத்தி பசாசினுல் கடினமாய் உபாதிக்கப்படுகிருள். வார்த்தைகள் புரண்டோடின. கண்ணீர் வழிந்தோடினது. உடல் குலுங்க அழுதாள். அவரோ அன்புடன் அவளை நோக்கினுர். அந்தப் பார்வையினுல் அவள் பூரித்தாள். எழுந்துவா வீடு செல்வோம் என்பார் — அல்லது எழுந்துபோ உன் மகள் குணமடைவாள் என்பார், அல்லது போய் அந்தப் பெண்ணை இங்கே அழைத்துவா என்று சொல்லுவார், என்றெல்லாம் எண்ணினுள். தன் காரியம் பலித்தது. தன் மகள் சுகமடைந்து விடுவாள் என்று நம்பினுள். இத்தனை கருணை அவரது கண்களில் சுரந்திருந்தும் யாதொன்றும் அவர் பேசவில்லை. ஒரே மௌனம். ஒரு வார்த்தையும் வெளிவரவேயில்லை பல மணி நேரமாக. என்ன கடிய

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மகளிர் மன்றம்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

மனது. என்ன இறுகிய இதயம். குணப் படுத்தாவிட்டாலும் நல்ல வார்த்தை ஒன்று கிலும் சொல்லக்கூடாதா? உடைந்த இந்தத் தாயுள்ளத்திற்கு ஒரு ஆறுதல் மொழி கூறக் கூடாதா? இந்த மனிதனைப் பற்றித்தானா யூத சினேகிதிகள் அவ்வளவு உயர்த்திப் பேசினார் கள்?'' இவ்வாறு அவள் மனம் நொந்து அந்த இடத்தை விட்டு தன்வீடு சென்றாளா? இல்லை. இக்கடுமையான வேளையிலும் அவள் நம்பிக் கையை இழக்கவில்லை. ஏதோ ஒன்று அவர் பால் இழுத்தது.

அவர் சென்றார் சீடர்கள் தொடர்ந்தார் கள். அவளும் தொடர்ந்தே சென்றாள். அழுது கொண்டே அவரைக் கூப்பிட்டுக் கொண்டே பித்துப் பிடித்தவள் போல் சென் றாள். அவர் அவளைக் கவனிக்கவில்லை. திரும் பிக்கூடப் பார்க்கவில்லை. சீடர்களோ சொல் லிப் பார்த்தார்கள். சினந்தார்கள் அவள் நிற்கவில்லை. துரத்திப்பார்த்தார்கள் நிற்க வில்லை. அவர்களால் முடியவில்லை. அவள் மிக வும் பிடிவாதக்காரியாகத் தோன்றினாள். அவர்களோ ''இந்தப் பெண் நமது பிறகே கூப்பிட்டுக்கொண்டே வருகிறாளே! தேவரீர் அவளை அனுப்பிவிடும்'' என்று வேண்டினார் கள். அவர் நின்றார். அவர்கள் நின்றார்கள். அவளும் நின்றாள் அவளைப் பார்த்தார். பார்வையில் கனிவு இருந்தது. வார்த்தை யிலோ கடுமையிருந்தது. ''இஸ்ராயேல் கோத்திரத்தினின்று சிதறிப்போன ஆடுகளி டத்திற்கு அனுப்பப்பட்டேனேயொழிய மற் றப்படியல்ல'' என்றார். சீடர்கள் அகமகிழ்ந் தார்கள். அவள் அங்கலாய்த்தாள். அவரோ முடியாது என்று சொல்லவில்லை. ''போ'' என்று விரட்டவில்லை. அந்தப் பார்வையில் இன்னும் இரக்கம் தோன்றுகிறது. அந்தப் பார்வையில் இன்பத்தை – ஆறுதலை – ஒரு தூண்டுதலைக் கண்டாள். விடாமுயற்சியுடன் அவரைக் கெஞ்சினாள். இஸ்ராயேல் மக்களைச் சேர்ந்தவளல்ல, உண்மையே. ஆனால், அவள் ஒரு பெண். துயரால் வாடி நிற்கும் தாய். அவள் மீண்டும் வந்து அவரை ஆராதித்து ''ஆண்டவரே அடியாளுக்கு உதவியருளும்'' என்று மன்றாடினாள். ''கேளுங்கள் கொடுக் கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும். தேடுங் கள் அகப்படும்'' என்று உரைத்தவர் அவர். அவள் கேட்கிறாள். அவர் கொடுக்கவில்லை. அவரது இதயத்தைத் தட்டுகிறாள். அவர் திறக்கவில்லை. அவரது உதவியைத் தேடு கிறாள் அது அவளுக்கு அகப்படவில்லை. தஞ்ச மென்று அவரிடம் வந்தாள் அவள். கடும் சொற்களை அடுக்குகிறார் அவர் நாய்க்கு அவளை ஒப்பிடுகிறார். ''பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது நல்லதல்ல'' என்றார். எத்தனை கொடிய சொற்கள்! தன் மானமுள்ள எவளும் அந்த இடத்தைவிட்டு உடனே அகன்று விடுவாள். ஆனால் விடா முயற்சியே உருவான அவள், நம்பிக்கையே இலட்சியமான அவள், ''ஆண்டவரே! சரி தான். ஆயினும் நாய்க்குட்டிகளும் தங்கள் எஜமான்களுடைய மேசையிலிருந்து விழு கின்ற ரொட்டித் துண்டுகளைச் சாப்பிடுகின் றனவே'' என்றாள்.

அவர் இவ்வார்த்தைகளைக் கேட்டார். அவர் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன. இனியும் தாமதிக்க தாங்கி இருக்கமுடியாது. இத்தனை நேரமும் இறுகிய இதயமாக நடித்த வேடம் கலைத் தார். ஒரே உணர்ச்சி வெள்ளம் கரைபுரண் டோடியது. ''ஓ மாதே! உன் விசுவாசம் பெரிதாயிருக்கிறது, நீ விரும்பினபடியே உனக்கு ஆகக்கடவது? நீ போ, பசாசு உன் மகளை விட்டுப் போய்விட்டது'' என்றார். அவள் நம்பினாள், நன்றி செலுத்தினாள். வீட் டுக்கு விரைந்தாள். அங்கே தன் மகள் தான் முன்பு கண்ட அதே யௌவனப்பருவத்தோற் றப் பொலிவுடன் படுக்கையில் படுத்திருப்ப தையும் பசாசு போய் விட்டதையும் கண் டாள். அவளது மன்றாட்டுக்கு அவரது அலட் சிய மனப்பான்மையும் கடும் சொற்களும் அவ ரது திருவிளையாடல்தானே? அவர் நம்மோடும் இவ்வாறுதான் விளையாடுகிறார். தாய் தன் பிள்ளையை ஏமாற்றி அழுகையை மூட்டி இன் புறுவது போல் அவர் நம்மை அழச் செய்கி றார். நமது விசுவாசத்தை பரீட்சை செய்கி றார். நம்மிடம் விடாமுயற்சி இருக்கிறதா, நாம் செபத்தில் நிலைத்து நிற்கிறோமா என்று பார்க்க விரும்புகிறார். நாமோ சோர்வு கொள் ளுகிறோம். நம்பிக்கையை இழக்கிறோம். செபத்தைக் கைவிடுகிறோம், நாம் செபத்தில் கேட்டவை அனைத்தும் உடனே அருளப்பட வில்லை என அங்கலாய்க்கிறோம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்றவர், கேட்கும் முதல் விநாடியே கொடுக்கப்படும் என்று சொல்ல வில்லையே. இதை நாம் மறக்கிறோம். செபத் தில் மனச்சோர்வு அடைகிறோம்.

நாய்க்குட்டிக்கு அவளை அவர் ஒப்பிட் டும் அவள் அகலவில்லை. தாழ்ச்சி நிறைந்த இதயம் அவளுடையது. அதனால் முடிவு வரை யில் பின் சென்றாள். அவளது செபம் விசு

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# லூர்தன்னையின் அருள்

செல்வன். அ. பத்திநாதன்,
பாலையூற்று.

அந்திக் கருக்கல் நேரம். வெள்ளித் தட்டை வானத்தில் ஒட்டி வைத்ததுபோல் பூரண சந்திரன் மெல்ல உலகை எட்டிப் பார்த்தான். வீடுகளில் தீபம் ஏற்றப்படும் நேரம். பட்சி ஜாலங்கள் தங்களுடைய இனிமையான சுருதி பேதங்களை மக்களுக்கு வழங்கிக்கொண்டே தங்கள் கூடுகளை நோக்கிச் சென்றன. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் இயற்கை வனப்புடன் இலங்கும் லூர்து மாதாவின் தேவாலயத்தில் பூசை முடிந்து பொதுமக்கள் திரள் திரளாக சாலையில் சென்றுகொண்டிருந்தார்கள். பூசையை ஒப்புக்கொடுத்த குருவானவரும் தனது மோட்டார் சைக்கிலில் படபடவென்று போய்விட்டார். பூசைக்கு உதவி செய்த பூசைப் பரிசாரர்களும் பூசைப் பொருட்களை எடுத்து வைத்துவிட்டு தங்கள் தங்கள் மனை சென்றுவிட்டனர். இப்பொழுது தேவாலயத்திலுள்ள சிலுவை மரத்தடியிலே தொங்கும் ஓர் விளக்கைத் தவிர வேறு யாருமில்லை. ஆனால் அந்தப் புனித இடத்தில் லூர்து மாதாவின் காலடியிலே, கண்ணீரும் கம்பலையுமாக புலம்பிக்கொண்டிருந்தாள் ஒரு பெண்.

ஆம்! அவள்தான் மேரி. மேரி ஓர் நடுத்தரக் குடும்பத்தின் இளம்பெண். உலகிலுள்ள சௌந்தர்யமே அவளிடம் குடிகொண்டிருந்தது. மேரியின் தாயார் இருதய நோயினால் பீடிக்கப்பட்டு மிகவும் பெலவீனமுடையவள். அவள் மேரியைத் தனது கணவனுக்கு அன்புப் பரிசாக ஈந்துவிட்டு கண்ணை மூடிவிட்டாள். மேரியின் தாயார் இறந்தபின் அவளுடைய தந்தை மறுமணம் புரியாமல் மேரியை கண்ணும் கருத்துமாக பதினைந்து வயது வரை வளர்த்து படிக்கவைத்தார். அவனது தந்தையார் துணி வியாபாரத்தில் ஈடுபட்டு பெரும் பணம் சம்பாதித்து தன் அழகு மகள் மேரிக்காக சேமித்து வைத்தார். மேரியின் தந்தைக்கு வியாபார விடயத்தில் பல வைரிகள் இருந்தனர்.

ஒருமுறை அவர் வியாபார விடயமாக வெளிநாடு சென்றவர், அங்கு அவருடைய எதிரிகளின் சூழ்ச்சியினால் வியாபாரப் பொருட்களுடன் கடத்தப்பட்டவர், வருடங்கள் ஐந்தாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை. பொலிசாரும் மேரியுடைய தந்தையை மீட்க எடுத்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. தாயுமில்லாமல், தந்தையுமில்லாமல், அல்லல் பட்ட மேரியை அவளது சிற்றப்பாதான் அன்று தொடக்கம் இன்றுவரை அவளுக்கு உணவும் உடையும் அளித்து, அவளை உயர் வகுப்புவரை படிக்கவைத்தார். மேரியும் தனது சிற்றப்பாவிடம் வளர்ந்து பருவ வயதடைந்து அழகு கொழிக்கும் மங்கையாக விளங்கினாள். அவளிடமிருந்த அழகு காரணமாக பல காளையர்கள் மேரியைச் சுற்றி வட்டமிட்டனர்.

ஆனால் மேரியோ தனது எதிர்கால வாழ்வை ஓர் உறுதியான அஸ்திவாரத்தின்மேல் கட்டி எழுப்பிவிட்டாள். ஆம்! அவள் தனது கன்னித்தன்மையை கடவுளுக்கு அர்ப்பணித்துவிட்டாள். அவள் கன்னியர் மடத்தில் சேர்ந்து தனது எதிர்கால வாழ்வை கடவுளுக்கு ஊழியம் செய்து மன நிறைவு பெறும் கன்னிகையாக வாழ விரும்பினாள். ஆனால் அவளுடைய எதிர்கால வாழ்க்கைத் திட்டத்தையே தகர்த்தெறிய முற்பட்டுவிட்டார் மேரியை வளர்த்துவந்த அவளுடைய சிற்றப்பா. பணத்துக்கு அடிமைப்பட்டு அதற்கு ஆசைப்பட்ட மேரியுடைய சிற்றப்பா பணச் செருக்குள்ள செல்வச் சிறப்புமிக்க ஓர் பிற

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## லூர்தன்னையின்...

[9ம் பக்கத் தொடர்ச்சி]

சமய இளைஞனுக்கு மேரியை மணம் முடித்து வைக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். இப்பொழுது மேரி லூர்து மாதாவின் காலடியிலே விழுந்து கண்ணீரும் கம்பலையுமாக புலம்புவதற்கு காரணம் கடவுளுக்கு ஊழியம் செய்து கழிக்கப்போகும் தனது எதிர்கால வாழ்வை குலைத்து, அதற்கு மாறாக நடக்கப்போகும் இத்திருமணமே. தந்தை கடத்தப்பட்டதிலிருந்து இன்றுவரை தனது சிற்றப்பாவுடைய உப்பைத் தின்று வளர்ந்த மேரிக்கு சிற்றப்பாவின் பண ஆசை பிடித்த திருமணத் திட்டத்தை எதிர்த்துப் போராட துணிவில்லை. மேரியினுடைய எதிர்கால கன்னிகை வாழ்வை குலைக்கும் சாத்தானாக வந்த திருமணத்திற்கு நாளும் குறிக்கப்பட்டுவிட்டது.

ஒருநாள், மாலை நான்கு மணியிருக்கும், மேரி தனது அறையில் கட்டிலில் படுத்தவாறே, பொழுது புலர்ந்தால் பன்னீரால் கழுவவேண்டிய கண்களை கண்ணீரால் கழுவிக்கொண்டிருந்தாள். ஆம்! இந்த இரவு கழிந்தால் மேரிக்கு திருமணம். அப்பொழுது மேரியுடைய அறைக்கதவு படபடவென்று தட்டப்பட்டது. மேரி கண்கள் மருள கால்கள் துவள சென்று கதவுத் தாள்ப்பாளை விலக்கினாள். அங்கு, வாசலில் மேரியுடைய தந்தை இரு போலிசாருடன் நின்றார். மேரி தனது தந்தையுடன் நின்ற போலிசாரைக் கண்டதும் மிகவும் பயமடைந்தாள். அதற்குள் மேரியின் தந்தை பயப்படாதே மேரி அவர்கள் எனக்கு பாதுகாவலாகவே வந்திருக்கிறார்கள். ஐந்து வருடங்களுக்கு முன் பகைவர்களால் கடத்தப்பட்ட என்னை நேற்றுத்தான் மீட்டார்கள் என்று கூறித் தன்னுடன் வந்த போலிசாரை அனுப்பிவிட்டு மேரியின் அறைக்குள் நுழைந்தார். மேரியின் அறைக்குள் நுழைந்த தந்தை வந்த களைப்பு அடங்க அங்குள்ள ஒரு நாற்காலியில் அமரு முன்னே தனக்கு பின்னால் இருந்து எழுந்த அழுகை ஒலியைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினார். மேரி சோகத்தின் பிம்பமாக மடை திறந்த வெள்ளம்போல் நேத்திரங்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் பெருகிச்சிதற, மனம் குமுற சிற்றப்பா தனக்கு ஏற்பாடு பண்ணிய விருப்பமில்லாத திருமணத்தையும், தன்னுடைய எதிர்காலத் துறவற வாழ்க்கையையும் எடுத்துக்கூறினாள் தன் தந்தையிடம்.

மேரி கூறிய யாவற்றையும் கேட்ட தந்தை மனதில் ஏதோ தீர்மானம் செய்து கொண்டவராய் புயலென அறைக்குள்ளிருந்து வெளியே சென்றவர், மீண்டும் வரும்போது ஓர் வாடகைக் காருடன் வந்தார். வந்தவர் மேரியை காரில் ஏற்றிக்கொண்டு போகும்படி கார் சாரதியிடம் ஓர் இடத்தைக் குறிப்பிட்டார். வேகமாக சென்றுகொண்டிருந்த கார் ஓரிடத்தில் சாலையோரத்தில் மெதுவாக ஒரு குலுங்கலுடன் நின்றது. காரின் ஜன்னல் வழியாக சுற்றும் முற்றும் பார்த்த மேரி ஆச்சரியம் அடைந்தாள் ஆம்! அது கன்னியர் மடம். மேரியை அங்கு சேர்ப்பதற்கே மேரியின் தந்தை அவளை அங்கு கூட்டி வந்திருந்தார். சற்று நேரத்திற்குப்பின் உள்ளேயிருந்து வந்த பெரிய தாயாரிடம் மேரியை ஒப்படைத்து சிறிய தொகை பணமும் கொடுத்தார். மேரி பெரிய தாயாருடன் கன்னியர் மடத்துக்குள் செல்வதையே கண்களில் நீர் மல்க நின்று பார்த்துக்கொண்டிருந்தார். மணப்பந்தலில் விரும்பாத மங்கல்லியம் தொங்கவேண்டிய மேரியின் கழுத்தில் இப்பொழுது லூர்தன்னையின் அருளால் யேசுவின் திருச்சிலுவை தொங்குகின்றது.

[யாவும் கற்பனை]

---

## மகளிர் மன்றம்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வாசமுள்ளது. அதனால் தன்நலத்தை அவள் நாடவில்லை. தன் மகளின் உடல் நலத்தையே வேண்டினாள். அது அன்பு நிரம்பியது. வெற்றி பெற்றாள். சீடர்கள் துரத்தினார்கள். ஆனால், அவள் இறுதிவரையில் உறுதியாக நிலைத்து நின்றாள். அவள் செபம் விடாமுயற்சியுடன் செய்யப்பட்டது. நம்முடைய செபம் எப்படி?

நமது வாழ்க்கைப் பயணத்திலே எம்மை எதிர் கொள்ளுகின்ற சோதனையிலும் வேதனையிலும் எல்லா வாய்ப்புகளிலும் நாம் அவரை அண்டிப் போகவேண்டும். தாழ்ந்த இதயத்துடன் ஓயாமல் ஒழியாமல் விடாமுயற்சியுடன் செபிக்கவேண்டும். கல் நெஞ்சர்போல் சிறிது காலம் காட்டிக் கொள்வார். திறமையாக நடிப்பார். ஆனால் வெகுநேரம் அவரால் பொறுக்க முடியாது. இளகிய இதயம் அவர் நடிப்பைக் காட்டிக் கொடுத்து விடும் ஏனெனில் கல்லையும் கனியாக்கும் கடவுள் அல்லவா அவர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோர் மன்றம்

## கவலை

சென்ற விடுதலையின் போது ஒரு முஸ்லிம் நன்பரின் புகையிலைத் தோட்டத்தைப் பார்க்கச்சென்றிருந்தேன். அவர் தம் தோட்டத்துக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்தார். மகன் தோட்டத்துள் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான். நண்பரின் அருகில் சென்று சேமம் விசாரித்தேன். இடையில் அவரது நீர் இறைக்கும் இயந்திரத்தையிட்டு அறிய விரும்பினேன்

நீர் ஓர் ஓடையிலிருந்து ஒரு தோற்பாத்திரத்தால் மேல் எடுக்கப்படுகிறது. அதற்கு தோப்பை என்று பெயர். இது நீண்ட கயிறுகளால் வெளியிலுள்ள இருமாடுகளில் தொடுக்கப்பட்டுள்ளது. இம்மாடுகள் முன்னே செல்லும்போது, தோப்பை நீரைக்கொண்டு மேலே வரும் ஒருவர் நீரை வாய்க்காலில் செலுத்திவிடுவார். மாடுகள் பின்னே செல்லும் போது தோப்பை நீருட் செல்லும். இவ்வாறு இறைக்கும் இயந்திரத்துக்கு ''கவலை'' என்று கூறியதும் பெரிதும் ஆச்சரியப்பட்டேன். 'ஏன்' இதற்கு 'கவலை' என்கிறீர்கள்? நண்பரே, இங்கு மாடு கட்டின நாட்தொடக்கம் வீடு திரும்பும்வரை கவலைதான் என்றார்.

இது அவர்கட்குள்ள ஒரு கவலை. இல்லற வாசிகளாகிய எமக்கோ எண்ணற்ற கவலைகளுள. வீடு வாசல் இல்லாக்கவலை, பொருள் வசதியில்லாக் குறை, ஊண் உடையில்லாக் குறை, இவை எல்லாவற்றிற்கும் முடிசூட்டும் குறை நம் பிள்ளைகளைப்பற்றிய கவலை. இது உண்மைதான்.

கிறிஸ்தவ குடும்ப வாழ்வு இறைவனால் அருளப்பட்ட ஒரு விசேட திருவருட் சாதனத்தின் பயன். மாபெரும் பொறுப்புகளும் அதேபோல் அரிய பயன்களையும் தரவல்லது (காண்க. வத். சங். ஏடுகள். இன்றைய உலகில் திருச்சபை பிரிவு: 52) ஆனால் இம்மண்ணக வாழ்வில் நாம் காண்பது அனுபவிப்பது எல்லாம்.

''பிள்ளையைப் பெறு நாள் துன்பம்;
வளர்த்திடு நாளும் துன்பம்;
விதலை நோயடையிற் துன்பம்;
வியனுறு காலன் வந்து கைப்பற்றில்
கணக்கில் துன்பம்;
இதமுறு சேயால் எந்நாள் என்றைக்குந்
துன்பந்தானே''

என்ற தமிழ்ப்பெரியாரின் பொன்மொழிகள் தான்.

ஆயினும் இறைவன் இவ்வாறான கவலை நிறைந்த பொறுப்பினைத் தரும்போது, அவற்றைத் தாங்குதற்கான துணையையும் தராமல் விட்டுவிடவில்லை. கிறீஸ்தவர்களாகிய நமக்கு இறைவனின் பேரன்பும் கிறீஸ்துவின் உடன் வாழ்வும், தூய ஆவியின் நட்புறவும் என்றுமுண்டு என்ற உயரிய அறிவை நாம் பெரும்பாலும் உணர்ந்துகொள்கிறோமில்லை.

இந்த அடிப்படையில் நாம் நம் குடும்பத்தைக் கவனிக்க முனைந்தால, நாம் கவலையெனக் கருதும் யாவும் ஒளிமுன் இருளென மறைந்தொழியும்.

நம் சிறுரே நம் அரும் செல்வங்கள். இது பல பெரியார் கூறும் உயரிய பொன்மொழி. இவர்களை உருவாக்குவதில்தான் எத்துணை கஷ்டங்கள். நாம் உயிரளித்தவர்கள். எனவே உரிய கல்வியையும் அளிக்கக் கடமைப்பட்டவர்கள். இது இறைவன் நமக்கு விதித்துள்ள ஆணை. அனைத்துலக சிறுர் உரிமைச் சாசனமும் கூட இதை வற்புறுத்துகிறது. எனவே அவர்கட்கு உரிய காலத்தில் உரிய கல்வியை அளிக்கவேண்டியது நம் கடமை.

இதிலும் உரிய வேளை அவர்கட்குரிய இறையறிவை ஊட்டவேண்டியது அதிக மேலான கடமை. ★

வெளிவந்துவிட்டது!
கிறிஸ்துநாதர் வழிநடத்துகிறார்
5ம் வகுப்புக்குரிய கிறிஸ்தவ பாடநூல்
(எமது வழித்தொடர்ச்சி இல. 4)
விலை: ரூ. 2—50 அஞ்சல் செலவு —/65 சதம்.
கிடைக்குமிடம்:—
மறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

*பாடம் 25: திருச்சபை தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றுகின்றது.*

இப்பாடம் க. தி. வி. 54ம் பாடமாகும்.

***சிந்தித்துப்பார்: விடைகள்:***

1. (i) ஞானஸ்நானம் — கடவுளின் பிள்ளைகளாக்குகின்றது.

(ii) உறுதிபூசுதல் — பரிசுத்த ஆவியை அளிக்கிறது.

(iii) திவ்விய நற்கருணை — இறை உயிர் அளிக்கும் உணவு.

(iv) பச்சாத்தாபம் — பாவ மன்னிப்பு அளிக்கிறது.

(v) நோயில் பூசுதல் — ஆன்மா, உடல் இரண்டிற்கும் வலிமை அளிக்கிறது.

(vi) குருத்துவம் — குருத்துவ வாழ்விற்கும் அலுவலுக்கும் தேவையான அருளைத் தருகின்றது.

(vii) மெய்விவாகம் — மணமகனையும் மணமகளையும் புனித ஐக்கியத்தில் இணைத்து, மண வாழ்விற்கு வேண்டிய அருளைக் கொடுக்கிறது.

2. தேவதிரவிய அனுமானங்களில் செயலாற்றுகிறவர் கிறிஸ்துநாதரே.

3. வெளி அடையாளம் ஆன்மாவில் பொழியப்படும் உள் அருளைக் குறிக்கின்றது.

4. ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவம் என்பன.

5. இவை ஆன்மாவில் அழியாத முத்திரையைப் பொறிப்பதால் ஒரு முறை மட்டுமே பெறலாம்.

6. ஞானஸ்நானம், பச்சாத்தாபம் என்னும் தேவதிரவிய அனுமானங்களைப் பெற உண்மையான மனஸ்தாபம் வேண்டும்.

7. மற்றத் தேவதிரவிய அனுமானங்களைப் பெற அருள் உயிர் தேவைப்படுகின்றது.

***பயிற்சிகள்:***

*கீறிட்ட இடங்களை நிரப்புக:*

1. ஆன்மாவில் பொறிக்கப்படும் அழியாத குறிக்கு......................என்று பெயர்.

2. ஒவ்வொரு தேவதிரவிய அனுமானத்திற்கும் ஒரு........................ அடையாளம் உண்டு.

3. வெளி அடையாளம்.......................................... குறிக்கின்றது.

4. அருளப்பர் மக்களுக்கு...................... ஞானஸ்நானம் கொடுத்தவர்.

5. திருச்சபை...............................தேவதிரவிய அனுமானங்களை வழங்கிவருகின்றது.

---

*பாடம் 26: திருச்சபையின் ஆயருக்குரிய அலுவல்.*

இப்பாடம் க. தி. வி. 56ம் பாடமாகும்.

***சிந்தித்துப்பார்: விடைகள்:***

1. திருச்சபை நல்லதைச் செய்யத் தூண்டி ஆன்ம மீட்புக்கு ஆபத்தானவற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றது. சட்டங்களை விதிக்கின்றது. மக்கள் தம் பாவங்களை உணர்ந்து அவைமேல் அச்சம் கொள்ளவும் தூண்டுகிறது. தேவையான நேரத்தில் தண்டிக்கின்றது. இவ்வாறு நம்மை கிறிஸ்தவ வாழ்வு வாழ நடத்துகின்றது.

2. சில பாவங்கள் மிகவும் கனமான பாவங்களாகையால் அவற்றிற்குத் தண்டனை விதித்திருக்கிறது.

3. திருச்சபை விதித்திருக்கும் தலையான தண்டனை மறை விலக்கு.

4. ஆன்மாவிலும் உடலிலும் துன்புறுவோர்க்கு உதவ தனி அன்புடன் திருச்சபை அவர்களைத் தேடிச் செல்கிறது.

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

*[12ம் பக்கத் தொடர்ச்சி]*

5. பாப்பாண்டவரும் மேற்றிராணிமார்களும் திருச்சபையின் ஆயர்கள்.

6. ''பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும்''

**பயிற்சிகள்:**

''ஆம்'', ''இல்லை'' எனப் பதில் கூறுக:

1. விசுவாசிகள் நல்ல கிறிஸ்துவ வாழ்வு வாழ ஊக்கமளிக்கும் கடமை திருச்சபைக்கு உண்டு.

2. ஒருவன் மறை விலக்கு செய்யப்பட்டால், அவனுக்கு பல ஞான நன்மைகளும், சிறப்புரிமைகளும் மறுக்கப்படுகின்றன.

3. ஒவ்வொரு பங்கும் அதன் மேய்ப்பரால் நடத்தப்படுகின்றது.

4. விசுவாசிகள் மேய்ப்பரின் குருத்துவ பணியில் அவரோடு ஒத்துழைக்க வேண்டிய அவசியமில்லை.

5. திருச்சபையின் தலைமை ஆயர் பாப்பாண்டவர், இராயப்பரின் வழிவந்த வாரிசு.

# தவம் செய்யுங்கள்!

—★—

இம்மாதம் 16ந் திகதி **தவக்காலம் தொடங்குகின்றது.** இத் தவக்காலத்தில் நீங்கள் என்ன **விசேஷ தவம்** செய்யப் போகிறீர்கள்? சிந்தித்துத் தீர்மாணம் செய்துகொள்ளுங்கள்.

**பாடம் 27: பரிசுத்த கன்னிமரியம்மாள் நமது அன்னையும் அரசியும்.**

இப்பாடம் க. தி. வி. 60ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. ஏனெனில் கடவுள் திருமகன் மனிதனாய் அவதரிக்க தம் உதவியை நல்கினாள். அத்துடன் அவள் மீட்பரின் அன்னையுமாயிருப்பதால்.

2. கிறீஸ்து நம் சகோதரராய் இருப்பதால் அவள் நமது அன்னை.

3. கிறீஸ்துவின் பலியில் அருகே நின்று பங்கெடுத்ததாலும், துயரவாள் அவள் இதயத்தை ஊடுருவியதாலும் அவளை ''வியாகுல தாய்'' என அழைக்கிறோம்.

4. இளந் திருச்சபையின் இன்ப துன்பங்களில் கன்னிமரியாள் பங்கு எடுத்துக் கொண்டாள்.

5. கன்னிமரியம்மாள் எப்பொழுதும் பாவமின்றி வாழ்ந்ததால், ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டாள்.

6. கன்னிமரி விண்ணகத்தில் நமக்காக கடவுளிடம் மன்றாடுகிறாள். நமக்கு வரங்களையும் பெற்றுத் தருகின்றார்.

**பயிற்சிகள்:**

பொருத்தமானதைத் தெரிந்து எழுதுக.

**(அ)**

1. பரிசுத்தர் அனைவரிலும் முதல் இடம் பெறுபவர்.........................
2. விண்ணக அரசில் உள்ளோர்...................
3. வியாகுல தாய்.............................
4. நாம் இயேசுநாதரின்.....................
5. கடவுளின் திருமகன்.....................

**(ஆ)**

1. இயேசுநாதர்
2. கன்னிமரியாள்
3. சகோதரர்
4. சம்மனசுகள், பரிசுத்தர்.
5. பாவிகளுக்கு அடைக்கலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருக்கோணமலை பிராந்திய கத்தோலிக்க இளைஞர் சம்மேளனம்

திருக்கோணமலை பிராந்திய கத்தோலிக்க இளைஞர் சம்மேளனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம், கடந்த 12-12-1971 மாலை 4-15 மணியளவில் சமூக சேவை நிலையத்திலுள்ள துரைரத்தினம் அரங்கில் அருட்திரு. எஸ். அருள்குணஞானம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

செபத்துடன் தொடங்கிய மேற்படி கூட்டத்தில் ''அப்போஸ்தலர் பணி'' என்ற நூலிலிருந்து தூய ஆவியானவரின் வருகை பற்றி செல்வன் பெஞ்சமின் ஜோர்ஜ் வாசித்தார்.

''திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு பங்கிலும் கத்தோலிக்க இளைஞர் இயக்கங்களையும், இள மங்கையர் மன்றங்களையும் உருவாக்கி, சமூக நற்பணி புரிவதுடன் பரஸ்பர நல்லெண்ணத்தையும் சகோதரத்துவத்தையும் பேணுதற்கும் பங்கின் வளர்ச்சியில் இளைஞர், இள மங்கையர் பணி பற்றிய பூரண அறிவினை ஊட்டவும் தான் இச்சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது எனத் தனது வரவேற்புரையில் அருட்திரு. எஸ். அருள்குணஞானம் அடிகளார் குறிப்பிட்டார்.

ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த இளைஞர் இயக்கங்களில் பல வளர்ச்சி பெற்றும், சில வளர்ச்சி குன்றியும் இருப்பதற்கான காரணங்களைப்பற்றி உறுப்பினர் அனைவரும் கருத்துப் பரிமாற்றம் செய்தபின் கீழ்க்காணும் தீர்மானங்களை ஏகமனதுடன் நிறைவேற்றினர்:

1. உறுப்பினர் அனைவரும் தத்தமது இயக்கங்களின் கூட்டங்களுக்கு ஒழுங்காகச் சமுகமளித்தல் வேண்டும்.

2. உறுப்பினர் அனைவரும் தத்தமது இயக்கங்களில் உறுப்பிரல்லாதாரைச் சேர்ப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

3. இள மங்கையர் மன்றங்கள் உருவாகவும் வளர்ச்சி பெறவும் தத்தமது பங்கிலுள்ள இளைஞர் இயக்கங்களைச் சார்ந்த உறுப்பினர் அனைவரும் தமது ஒத்துழைப்பினை நல்கவேண்டும்.

சம்மேளனம் சரிவர இயங்கும்வரை தற்காலிகத் தலைவராக அருட்திரு. எஸ். அருள்குணஞானம் அடிகளாரும் தற்காலிகச் செயலாளராகச் செல்வன் சி. எவ். சேவியர் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அடுத்து நடைபெறவிருக்கும் கூட்டம் எதிர்வரும் தை மாதம் நடுப்பகுதியில், அனைவரும் கலந்துகொள்ள வாய்ப்பாக ஞாயிறு தினத்தன்று இடம்பெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசனக்கோயில், சின்னக்கடை, பாலையூற்று, நிலாவெளி, சீனக்குடா, மூதூர் ஆகிய பங்குகளை உள்ளடக்கிய திருக்கோணமலை மாவட்டத்தில் பாலையூற்றைத் தவிர்ந்த ஏனைய பங்குகளில் ஓரளவு இளைஞர் இயக்கங்களும், இள மங்கையர் மன்றங்களும் இயங்கிவருகின்றன. பாலையூற்றுப் பங்குக் குருவானவரின் ஒத்துழைப்புடன் வெகு விரைவில் இளைஞர் இயக்கமும், இள மங்கையர் மன்றமும் உருவாக்கப்படவுள்ளது. இளைஞர்களும் இள மங்கையர்களும் ஒன்றிணைந்து சிரமதானப்பணி மேற்கொள்வதுடன் சமூக சேவைகளை விருப்புடன் செய்வதால் ஆத்ம திருப்தி ஏற்படுவதுடன் இறைவனின் நல்லாசிகளும் நிச்சயம் கிடைக்கப்பெறும் எனத் தமது நன்றியுரையில் அருட்திரு. எஸ். அருள்குணஞானம் அடிகளார் குறிப்பிட்டார்.

சிற்றுண்டி, தேனீர் விருந்து வழங்கப்பட்டபின்னர் செபத்துடன் கூட்டம் மாலை 5-45 மணியளவில் சிறப்புற முடிவடைந்தது.

சி. எவ். சேவியர்,
செயலாளர்.

**விரைவில் வெளிவருகிறது!**
குழந்தைகளின் ஞானஸ்நானத்திற்குரிய
**விசுவாசிகளின் கைநூல்**
(இலங்கை ஆயர்களின் அங்கீகாரம் பெற்ற புதிய சடங்குமுறையை அடக்கியுள்ளது).
கிடைக்குமிடம்:
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இதுதான் வாழ்க்கை நியதி

ஆலயம் தன்னில் அன்றொருநாள்
ஆருமற்ற வேளையிலே
ஆண்டவன் முன்னே அமைதியாக
அரை மணியாகிலும் கழிக்கவென்றே
ஆசையுடன் நான் சென்றிருந்தேன்
அங்கே கண்டேன் காட்சியொன்று
ஆண்டவன் அங்கு வரவுமில்லை
அதிதூதர் என்னை அணுகவுமில்லை
ஆயினும் கண்டேன் காட்சியொன்று
அதுதான் இந்தக் கவிதையின்று!

ஆண்டவன் பேழை அருகினிலே
அமைதியற்றதோர் குருவி
அங்குமிங்கும் அதனைச்சுற்றி
அங்கலாய்த்து நின்றதுவே
அதனின் காரணம் அறிய நானும்
அதிக நேரம் எடுத்தேனில்லை
அதுதான் நிழலை அந்தப் பேழையில்
அடித்துவைத்துக் கண்டதுதான்
அதுவும் வேறொரு குருவியென்றெண்ணி
ஆத்திரப்பட்டுக் கொத்தியதுவே.

பலமுறை பறந்தும் பன்முறை பாய்ந்தும்
பதிந்த அந்நிழலை அழிக்கவொண்ணுத
பறவையின் மீது பரிதாபம் எனக்கு
பட்டென்று வரவே தட்டியதுள்ளம்
''பரிதாபமெதற்கு அப்பறவையின் மீது!
பாரினில் மானிடர் வாழ்வது ஏது''
பணிந்து என் மனதில் கேள்விக்கான
பதிலைத்தேட பலவழி முயன்றும்
படுதோல்வியடைந்த பாவியெனக்கு
பறவையும், நிழலும் பதிலாகியதுவே.

மறந்தேன் என்னை பார்த்தேன் அவரை
மறுமொழி தானும் தரவா என்றூர்
நினைத்துப் பார் இந்தப் பாரினிலே
எதற்குமேயொரு காரணம் உண்டு
வீணே இதனை எதிர்த்து உனது
வீரத்தை விழலாய் இறைத்து விடாதே
நிம்மதி அதனை அடைவதற்கும்
நித்திய வாழ்வைப் பெறுவதற்கும்
அன்புத் தேவனின் அருட்கரம் என்றும்
துன்பம் உனக்குத் தூண்டி வராது.

நீயிருந்தால் உன் நிழலுமிருக்கும்
நியதி இதுதான் நீ எதிர்த்திடினும்
நினைவு வருவது மறந்ததினுல்தான்
இறப்பு வருவதும் பிறந்ததனுல்தான்
தனிமையை உணர்வது பரிவதனுல்தான்
தயவை அடைவதும் பிழையதனுல்தான்
துன்பத்தை வெறுப்பது இன்பத்தினுல்தான்
இன்பத்தை உணர்வதும் துன்பத்தினுல்தான்
அன்பு வளர்வதும் அறிவதனுல்தான்
அறிய விழைவதும் அன்பதனுல்தான்.

எம். றெஜீனுல்டா எ. சி.
கார்மேல் மடம்,
பொறளை.

## சின்னக்கடை கண்ட "கிறிஸ்மஸ்" விழா

உருவிலான் உருவாகி மண்ணவர் மாசகற்ற உடலெடுத்த பெருவிழா அண்மையில் உலகெங்கணும் கொண்டாடப்பட்டது. இப் பெருவிழாவினையொட்டி கலைமணக்கும் திருகோணமலையின்கண் உள்ள சின்னக்கடைப் பங்கிலும் ஓர் சிறு விழா நடைபெற்றது. விழா சிறுதாயினும் சிறப்பான பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

மார்கழித்திங்கள் இருபத்தியாறும் நாள் மாலை சுமார் ஆறரை மணியளவில் சிங்களமகளிரின் இசைநாடக நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமாகியது. மேல் நாட்டுப் பாணியில் அமைந்த இந்நிகழ்ச்சி காண்பார் கண்களுக்கு நல்விருந்தாய் நின்றது. இதைத் தொடர்ந்து பங்குத்தந்தை ஜே. அலெக்சாண்டர் அடிகள் சிற்றுரை நிகழ்த்திஞர். அடிகளார் தமது உரையில் ''கிறிஸ்து என்கின்ற ஒளி நம் வாழ்வுக்கு வழிகாட்டி; இதுபோன்ற விழாக்கள் இளம் உள்ளங்களை ஊக்குவிக்கின்றன'' வென்று கூறிஞர். மேலும் இவ்விழாவுக்கு உதவியவர்களுக்கு தமது பெருநன்றியையும் தெரிவித்தார். அதன்பின் சிறுவர் சிறுமியருக்கான பரிசளிப்பு நடைபெற்றது. திருகோணமலையில் உள்ள பெருந் தொழிலதிபரான உயர்திரு ஜெகநாதன் அவர்கள் பரிசில் வழங்கிஞர். இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

சின்னக்கடை இளைஞர் இயக்கத்தினரது இசை நிகழ்ச்சியும், இளம் பெண்கள் இருவர் ஆடிய நடனமும் குறிப்பிடும்படியாக அமைந்தது. கிழக்கிலங்கைக்கே பெருமை தருகின்ற நாட்டுக்கூத்து நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சிகரமாக இலங்கியது. பெரும்பாலும் சிறுவர் சிறுமியரையே கொண்டு தயாரிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி அனைவரின் ஏகோபித்த பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் பெற்றது. தற்காலத்துக்கேற்ப நாட்டுக்கூத்தில் சில புதிய முறைகளைக் கையாண்டது குறிப்பிடத்தக்கது. இறுதி நிகழ்ச்சியான இளம் பெண்களின் வில்லுப் பாட்டுடன் விழா முடிவுற்றது.

எஸ். எஸ். யேசுதாஸ்
சின்னக்கடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## "சமாதானத்தை விரும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நீங்கவேண்டும். சகலரையும் சமமாகச் சகோதர மனப்பான்மையுடன் பாவிக்கவேண்டும். ஒவ்வொரு தனி மனிதனின் உரிமைகளையும் மதித்து நடக்கவேண்டும். வறுமையை அகற்றத் தனியார் துறைகளும், அரசாங்கமும், நிறுவனங்களும் முன்வரவேண்டும் அப்பொழுதுதான் நிலையான சமாதானம் பூமியில் நிலவும்.

நீதியின் உறைவிடம் நிறைமனச் சான்ருகும். மனச்சான்றின் உண்மை ஏவுதலின்படி நடந்துகொள்வதே நீதியைச் செய்வதாகும். "நீதியின்பால் பசிதாகம் உள்ளோர் நிறைவு பெறுவர்" என்பது கிறீஸ்துநாதரின் போதனை. மானிட சமுதாயம் சமாதானம், சமாதானம் என்று ஓலமிட்டுக்கொண்டிருக்கும் உலகிலே நீதி என்ற வார்த்தையே மானமற்றுப் பண்பிழந்து போய்விட்டது. வீட்டு வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும், நாட்டு வாழ்க்கையிலும் அநீதியும், அக்கிரமமும், அட்டூழியங்களும் தாண்டவம் ஆடுவதைக் கண்டு நீதியே தலைகுனிந்து நிற்கின்றது. எனவே பரிசுத்த பாப்பரசர் பன்முறை வேண்டுவதுபோலச் சமாதானப்புரு உலகில் பறக்க நாமனைவரும் ஒன்றுபட்டுழைப்போம்.

"சமாதானம் செய்வோர் பேறு பெற்ளூேர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர். ★

---

## இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

அவருக்கு ஒத்தவர்களாகின்றனர்" (2ம் வத்திக்கான் மறைபரப்பும் பணி இ. 36) "விசுவாசிகள் ஞானஸ்நானத்தால் திருச்சபையுடன் இணைக்கப்பட்டு, கிறிஸ்தவ மறையின் வழிபாட்டை நிகழ்த்த அழியா முத்திரையால் குறிக்கப்படுகிறார்கள்.... உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தால் இன்னும் நெருங்கிய முறையில் திருச்சபையுடன் பிணைக்கப்படுகின்றனர். பரிசுத்த ஆவியின் தனி வல்லமையால் உறுதிப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளாகச் சொல்லாலும் செயலாலும் விசுவாசத்தைப் பரப்பவும் பாதுகாக்கவும் மிகவும் கடமைப்பட்டுள்ளனர்" (திருச்சபை இ. 11). உறுதிப்பூசுதல் கிறிஸ்தவ வாழ்வனைத்தின் ஊற்றும் உச்சியுமான நற்கருணைப்பலியோடு நெருங்கிய முறையில் இணைந்திருக்கின்றது; அதனையே நாடி நிற்கின்றது. ஏனெனில், திருச்சபையின் ஞான வளம் முழுவதும் புனிதமிகு நற்கருணையிலேயே அடங்கியிருக்கின்றது. ஏற்கெனவே ஞானஸ்நானத்தினதும் உறுதிப்பூசுதலினதும் முத்திரையைப் பெற்றவர்கள் நற்கருணையைப் பெறுவதால் கிறிஸ்துவின் மறை உடலோடு பூரணமாக இணைக்கப்படுகின்றனர் (2ம் வத்திக்கான் - குருக்களின் பணி இ. 5). உறுதிப்பூசுதல் தேவநற்கருணையோடு கொண்டிருக்கும் இந் நெருங்கிய தொடர்பைத் தெளிவாகக் காட்டும் பொருட்டே அது கூடிய மட்டும் திவ்விய பூசைப்பலியின்போதே அளிக்கப்படவேண்டுமென்று திருச்சபை இப்போது வற்புறுத்தியுள்ளது. ★


### தொண்டன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா (தபாற் செலவு உட்பட) | | 4-00 |
| 6 மாதங்களுக்கு (தபாற் செலவு உட்பட) | | 2-00 |
| தனிப்பிரதி ( ,, ,, ,, ) | | -30 |

**விளம்பர விகிதம்**

(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 3 × 4 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 6 | ,, | ரூ. 15/- |
| 4 × 6 | ,, | ரூ. 20/- |
| 5 × 6 | ,, | ரூ. 25/- |
| 6 × 6 | ,, | ரூ. 30/- |
| 7 × 6 | ,, | ரூ. 35/- |
| 7 × 7 | ,, | ரூ. 40/- |
| 8 × 7 | ,, | ரூ. 45/- |
| 9 × 7 | ,, | ரூ. 50/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தொண்டன் நிர்வாகி,**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.


இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S.J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1—2—72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media